ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே ஆதிவண் சடகோப யதீந்தர மஹாதேசிகாய நம:
அஸ்மத் குருப்யோ நம:



மஹாவித்வான் புரிசை நடாதூர் ஸ்ரீபாஷ்ய ஸிம்ஹாஸனம்

ஸ்ரீ உ.வே. வாத்ஸ்ய ஸ்ரீ க்ருஷ்ணமார்ய மஹாதேசிகன்

100வது திருநட்சத்திர மஹோத்ஸவ தொடக்கம்

ப்லவ - ஆவணி - சித்திரை

10-செப்டம்பர்-2021

வெளியிடுவோர் : தீதிலா நல்லோர் திரள் காலக்ஷேப கோஷ்டி

# पद्यमालिका - பத்யமாலிகா

புரிசை நடாதூர் ஸ்ரீபாஷ்ய ஸிம்ஹாஸனம்

வாத்ஸ்ய ஸ்ரீ உ.வே. க்ருஷ்ணமார்ய மஹாதேசிகனை பற்றி அந்தேவாசியான

முகுந்தகிரி ஸ்ரீ உ.வே. அநந்தபத்மநாபாசார்யர் இயற்றியது



**श्रीरङ्गशठजिद्योगि यतिवर्य पदाश्रयम् |**
**सारासार विवेकज्ञं वन्दे वत्स विभूषणम् || 1**

**ஸ்ரீரங்க சடஜித் யோகி யதிவர்ய பதாச்ரயம் |**
**ஸாராஸார விவேகஜ்ஞம் வந்தே வத்ஸ விபூஷணம் || 1**

ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹ திவ்ய பாதுகா ஸேவக ஸ்ரீவண் சடகோப **ஸ்ரீ ஸ்ரீரங்க சடகோப யதி**யின்(42ஆம் பட்டம் - இஞ்சிமேடு ஸ்ரீமத் அழகியசிங்கரின்) திருவடிகளை ஆச்ரயித்தவரும், ஸாரம் மற்றும் அஸாரத்தை (ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரபோதினி) பற்றிய விவேகத்தை நன்கறிந்தவருமான வத்ஸ குல விபூஷணமான ஸ்ரீ க்ருஷ்ணமார்ய மஹாதேசிகனை வணங்குகிறேன். (1)

## वीररघ्वीट् शठाराति चरणांबुज षट्पदम् |
## वीतरागं जितक्रोधं वन्दे वत्स विभूषणम् || 2

**வீரரக்வீட் சடாராதி சரணாம்புஜ ஷட்பதம் |**
**வீதராகம் ஜிதக்ரோதம் வந்தே வத்ஸ விபூஷணம் || 2**

ஸ்ரீவண் சடகோப **ஸ்ரீ வீரராகவ சடகோப யதி**யின் (43ஆம் பட்டம் - தேவானார்விளாகம் ஸ்ரீமத் அழகியசிங்கரின்) திருவடித்தாமரைகளில் வண்டானவரும் (காலக்ஷேபம் செய்தவரும்), வைராக்கிய சீலரும், கோபத்தை வென்றவருமான வத்ஸ குல விபூஷணமான ஸ்ரீ க்ருஷ்ணமார்ய மஹாதேசிகனை வணங்குகிறேன். (2)

**குறிப்பு:**

இங்கு ஒரு சுவாரஸ்யத்தை கவனிக்க வேண்டும்.

வீரராகவ என்னும் திருநாமத்தில், "ர" இரண்டு முறை வருகிறது. ஸம்ஸ்க்ருதத்தில் ரேபம் என்பதற்கு "ர" என்று அர்த்தம். எனவே **வீரராகவன் த்விரேபன்** என்று அழைக்கப்படுகிறான். அஃதே போன்று வண்டிற்கு, **ப்ரமர**: (भ्रमर:) என்று பெயர். இதிலும் "ர" இரண்டு முறை வருகிறதாலே வண்டிற்கு த்விரேபம் என்பது பெயர். இப்பொழுது, த்விரேபரான வீரராகவ யதிராஜரின் திருவடிகளை ஆச்ரயித்த த்விரேபனாக, சிஷ்யன் ஸ்ரீ க்ருஷ்ணமார்ய மஹாதேசிகன் விளங்குகிறார்.

## वेदान्तयोगिगुरुणा दत्तास्थान बुधं पदम् |
## वेदान्तोभय संपूर्णं वन्दे वत्स विभूषणम् || 3

**வேதாந்தயோகி குருணா தத்தாஸ்தாந புதம் பதம் |**
**வேதாந்தோபய ஸம்பூர்ணம் வந்தே வத்ஸ விபூஷணம் || 3**

ஸ்ரீவண் சடகோப **ஸ்ரீ வேதாந்த தேசிக யதி**யினால் (44ஆம் பட்டம் - முக்கூர் ஸ்ரீமத் அழகியசிங்கரினால்) ஸ்ரீமத் அஹோபில மடத்தின் ஆஸ்தான வித்வானாக நியமிக்கப்பட்டவரும், உபய

(ஸம்ஸ்க்ருதம் மற்றும் த்ராவிட) வேதாந்தத்தில் ஸம்பூர்ணராக விளங்கியவருமான வத்ஸ குல விபூஷணமான ஸ்ரீ க்ருஷ்ணமார்ய மஹாதேசிகனை வணங்குகிறேன். (3)

**नारायण यतीन्द्रस्य सुहृदामग्रगामिनम् |**
**सच्छिष्य वर्ग संपन्नं वन्दे वत्स विभूषणम् || 4**

**நாராயண யதீந்த்ரஸ்ய ஸுஹ்ருதாமக்ரகாமிநம் |**
**ஸச்சிஷ்ய வர்க ஸம்பந்நம் வந்தே வத்ஸ விபூஷணம் || 4**

ஸ்ரீலக்ஷ்மிந்ருஸிம்ஹ திவ்ய பாதுகா ஸேவக ஸ்ரீவண் சடகோப **ஸ்ரீ நாராயண யதிக்கு** (45ஆம் பட்டம் - வில்லிவலம் ஸ்ரீமத் அழகிய சிங்கருக்கு) ப்ரியமானவர்களில் (ஹிதைஷிகளில்) முதன்மையானவரும், ஸச்சிஷ்யர்களை ஸம்பத்தாக உடையவருமான வத்ஸ குல விபூஷணமான ஸ்ரீ க்ருஷ்ணமார்ய மஹாதேசிகனை வணங்குகிறேன். (4)

**सिंहमासे च चैत्रर्क्षे वर्षे दुन्दुभि नामके |**
**वंशे महति सञ्जातं वन्दे वत्स विभूषणम् || 5**

**ஸிம்ஹமாஸே ச சைத்ரர்க்ஷே வர்ஷே துந்துபி நாமகே |**
**வம்சே மஹதி ஸஞ்ஜாதம் வந்தே வத்ஸ விபூஷணம் || 5**

துந்துபி வருடத்தில், **ஸிம்ஹ மாதத்தில், சித்திரை நக்ஷத்திரத்தில்**, உயர்ந்த வம்சமான ஸ்ரீவத்ஸ குலத்தில் அவதரித்த, வத்ஸ குல விபூஷணமான ஸ்ரீ க்ருஷ்ணமார்ய மஹாதேசிகனை வணங்குகிறேன். (5)

**सिंहमासेऽह्यवातीर्णं भाष्यसिंहासने कुले |**
**श्रीमद्वैष्णव सिंहाख्यं वन्दे वत्स विभूषणम् || 6**

**ஸிம்ஹமாஸேऽஹ்யவாதீர்ணம் பாஷ்ய ஸிம்ஹாஸநே குலே |**
**ஶ்ரீமத் வைஷ்ணவ ஸிம்ஹாக்யம் வந்தே வத்ஸ விபூஷணம் || 6**

ஸிம்ஹ மாதத்தில், **ஶ்ரீ பாஷ்ய ஸிம்ஹாஸன** குலத்தில் அவதரித்தவரும், **"ஶ்ரீ வைஷ்ணவ ஸிம்ஹம்"** என்னும் பிருதம்(விருது) பெற்றவருமான, வத்ஸ குல விபூஷணமான ஶ்ரீ க்ருஷ்ணமார்ய மஹாதேசிகனை வணங்குகிறேன். (6)

**विद्वद्गोष्ठीवरिष्ठाख्य (विद्वद्गोष्ठीवरिष्ठाय) कमलानां दिवाकरम् |**
**वादिहंस पयोवाहं वन्दे वत्स विभूषणम् || 7**

**வித்வத்கோஷ்டீவரிஷ்டாக்ய (வித்வத்கோஷ்டீவரிஷ்டாய) கமலாநாம் திவாகரம் |**
**வாதிஹம்ஸ பயோவாஹம் வந்தே வத்ஸ விபூஷணம் || 7**

சிறந்த வித்வான்களின் கோஷ்டியாகிற தாமரைகளை மலர்த்தும் சூரியனானவரும், ப்ரதிவாதிகளான ஹம்ஸங்கள் கண்டு நடுங்கும் மழை **மேகமாக** திகழ்ந்தவருமான, வத்ஸ குல விபூஷணமான ஶ்ரீ க்ருஷ்ணமார்ய மஹாதேசிகனை வணங்குகிறேன். (7)

**श्रीनृसिंहप्रियाख्यायाः पत्रिकायाः धुरंधरम् |**
**गीताभाष्य प्रकाश्यं तं वन्दे वत्स विभूषणम् || 8**

**ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியாக்யாயா: பத்ரிகாயா: துரந்தரம் |**
**கீதாபாஷ்ய ப்ரகாச்யம் தம் வந்தே வத்ஸ விபூஷணம் || 8**

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா பத்ரிகையின் சிறந்த ஆசிரியராக, நிர்வாகியாக (ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக) திகழ்ந்தவரும், பகவத் ராமானுஜரின் ஸ்ரீகீதா பாஷ்யத்திற்கு வ்யாக்யானம் எழுதி ப்ரகாசம் செய்தவருமான, வத்ஸ குல விபூஷணமான ஸ்ரீ க்ருஷ்ணமார்ய மஹாதேசிகனை வணங்குகிறேன். (8)

**किंगृहेशं विचिन्वन्तं अचिन्त्यगुणमण्डितम् |**
**सात्विकानां सदा वन्द्यं वन्दे वत्स विभूषणम् || 9**

**கிம்க்ருஹேசம் விசிந்வந்தம் அசிந்த்யகுணமண்டிதம் |**
**ஸாத்விகானாம் ஸதா வந்த்யம் வந்தே வத்ஸ விபூஷணம் || 9**

திருவள்ளூர் வீரராகவனை எப்பொழுதும் மனதில் நினைத்துக் கொண்டிருப்பவரும், பிறர் நினைத்துப் பார்க்கவும் முடியாததான உயர்ந்த குணம் கொண்டவரும், ஸாத்வீகர்களால் தொழப்படுபவருமான, வத்ஸ குல விபூஷணமான ஸ்ரீ க்ருஷ்ணமார்ய மஹாதேசிகனை வணங்குகிறேன். (9)

## शमादिगुण संपन्नं सात्विकानां प्रियंकरम् |
## ताराधिप निभं कृष्णं वन्दे वत्स विभूषणम् || 10

**சமாதிகுண ஸம்பந்நம் ஸாத்விகாநாம் ப்ரியம்கரம் |**
**தாராதிப நிபம் க்ருஷ்ணம் வந்தே வத்ஸ விபூஷணம் || 10**

சமம் முதலிய அஷ்ட ஆத்ம குணங்கள் நிரம்பியவரும், ஸாத்விகர்களால் ப்ரியமாக நேசிக்கப்படுபவரும், நக்ஷத்திரங்களின் அதிபதியான **சந்திரனின் வெண்மையான காந்தி**(நிறம்) நிறைந்தவரும், ஆனால் **"க்ருஷ்ணன்" (கருப்பு)** என்ற **திருநாமத்தை உடையவருமான** வத்ஸ குல விபூஷணமான ஸ்ரீ க்ருஷ்ணமார்ய மஹாதேசிகனை வணங்குகிறேன். (10)

## भिरुदावलिभिर्भान्तं भाष्यसार प्रचारकम् |
## कर्तारं सुखबोधिन्याः वन्दे वत्स विभूषणम् || 11

**பிருதாவலிபிர்பாந்தம் பாஷ்யஸார ப்ரசாரகம் |**
**கர்தாரம் ஸுகபோதிந்யா: வந்தே வத்ஸ விபூஷணம் || 11**

பல பிருதங்களைப் பெற்றவரும், ஸ்ரீபாஷ்யத்தின் ஸாரத்தையும், ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தையும் ப்ரசாரம் செய்தவரும், **ஸ்ரீபாஷ்யத்திற்கு ஸுகபோதினி என்னும் ஸுகமான வ்யாக்யானத்**தை இயற்றியவருமான வத்ஸ குல விபூஷணமான ஸ்ரீ க்ருஷ்ணமார்ய மஹாதேசிகனை வணங்குகிறேன். (11)

**ஸ்ரீ புரிசை சுவாமி பெற்ற சில பிருதங்கள் :**

# தேசிக தர்சந சூடாமணி,

# ஸ்ரீ பாஷ்ய ஸாராம்ருதவர்ஷீ

# ஸ்ரீ வைஷ்ணவ ஸிம்ஹம்,

# இந்திய ஜனாதிபதி விருது (1994 - வேதாந்தம், பாரம்பரியம், ஸம்ஸ்க்ருதம்)

# மற்றும் பல...

**गृहस्थाश्रम कर्माणि यथाकालं यथाविधि |**
**कृतवन्तमहं देवं वन्दे वत्स विभूषणम् || 12**

**க்ருஹஸ்தாச்ரம கர்மாணி யதாகாலம் யதாவிதி |**
**க்ருதவந்தமஹம் தேவம் வந்தே வத்ஸ விபூஷணம் || 12**

க்ருஹஸ்தாச்ரம கர்மங்களை, அவற்றிற்குரிய காலங்களில், விதிமுறைப்படி செய்தவரான, வத்ஸ குல விபூஷணமான ஸ்ரீ க்ருஷ்ணமார்ய மஹாதேசிகனை வணங்குகிறேன். (12)

**गौरवर्णं विशुद्धाङ्गं कृपा पीयूषवर्षकम् |**
**कृष्णमेघं शिष्यसेव्यं वन्दे वत्स विभूषणम् || 13**

**கௌரவர்ணம் விசுத்தாங்கம் க்ருபா பீயூஷவர்ஷகம் |**
**க்ருஷ்ணமேகம் சிஷ்யஸேவ்யம் வந்தே வத்ஸ விபூஷணம் || 13**

தூய்மையான, பொன்மயமான பளபளத்த திருமேனி உடையவரும், கருணை என்னும் அம்ருதத்தைப் பொழிபவரும், சிஷ்யர்களாகிய சாதக பக்ஷிகளுக்கு க்ருஷ்ண மேகமானவருமான (மழை மேகமானவருமான) ஸ்ரீ க்ருஷ்ணமார்ய மஹாதேசிகனை வணங்குகிறேன். (13)

**षट्प्रबन्ध प्रणेतारं सच्छास्त्र प्रियवादिनम् |**
**पुरीशाख्य पुरेजातं वन्दे वत्स विभूषणम् || 14**

**ஷட்ப்ரபந்த ப்ரணேதாரம் ஸச்சாஸ்த்ர ப்ரியவாதிநம் |**
**புரிசாக்ய புரேஜாதம் வந்தே வத்ஸ விபூஷணம் || 14**

**ஆறு க்ரந்தங்களை** இயற்றியவரும், ஸத்சாஸ்திரங்களைப் பிரியமாக எடுத்துரைப்பவரும், **புரிசை** என்னும் அக்ரஹாரத்தில் **அவதரித்தவருமான** வத்ஸ குல விபூஷணமான ஸ்ரீ க்ருஷ்ணமார்ய மஹாதேசிகனை வணங்குகிறேன். (14)

**ஆறு க்ரந்தங்களாவன,**

(1) ஸுகபோதினி (ஸ்ரீபாஷ்ய வ்யாக்யானம்),
(2) கீதா பாஷ்ய ப்ரகாசிகா(கீதா பாஷ்ய வ்யாக்யானம்),
(3) மஹாபாரத வ்யாக்யானம்,
(4) தர்ம ஸாரம்
(5) ஸ்ரீரங்க விஜயம்,
(6) ஆசார்ய வைபவம்

**प्रभाते हस्तिशैलेशं इज्याकाले रमाहरिम् |**
**योगेरङ्गम् विचिन्वन्तं वन्दे वत्स विभूषणम् || 15**

**ப்ரபாதே ஹஸ்திசைலேசம் இஜ்யாகாலே ரமாஹரிம் |**
**யோகேரங்கம் விசிந்வந்தம் வந்தே வத்ஸ விபூஷணம் || 15**

ப்ராத: காலத்தில் கஜேந்திர வரதனாம் ஹஸ்திகிரி நாதனையும், இஜ்யாராதனத்தில் மாலோல ந்ருஸிம்ஹனையும், இரவில் நித்திரைக்குச் செல்லும் முன் ஸ்ரீரங்கநாதனையும் சிந்தனம் செய்பவரான, வத்ஸ குல விபூஷணமான ஸ்ரீ க்ருஷ்ணமார்ய மஹாதேசிகனை வணங்குகிறேன். (15)

## कृष्णमार्य पदांबोजे कृपा तस्यावलंबिना |
## भृङ्गेण पद्मनाभेन पद्यमाला समर्पिता || 16

**க்ருஷ்ணமார்ய பதாம்போஜே க்ருபா தஸ்யாவலம்பிநா |**
**ப்ருங்கேண பத்பநாபேந பத்யமாலா ஸமர்பிதா || 16**

இந்த **பத்யமாலிகா**, வாத்ஸ்ய ஸ்ரீக்ருஷ்ணமாசார்யரின் திருவடித்தாமரைகளை ஆச்ரயித்த **வண்டான, அந்தேவாசியான ஸ்ரீ அநந்தபத்மநாபன் ஸமர்ப்பிக்கும்** மாலையாகும். (16)

**குறிப்பு:**

ஆளவந்தார், ஸ்தோத்ர ரத்னம் 27வது ச்லோகத்தில், "எவ்வாறு தாமரைப் பூவில் தேனைப் பருகிய வண்டு, நீர்முள்ளிப்பூவை நோக்காதோ, அதுபோலவே, அமுதைத் தருகின்ற பெருமாளுடைய திருவடித் தாமரையிலே புத்தியை வைத்தவன், வேறொன்றை விரும்ப மாட்டான் " என்று பாடியுள்ளார்.

வாத்ஸ்ய ஸ்ரீக்ருஷ்ணமாசார்யரின் திருவடித்தாமரைகளை ஆச்ரயித்த "**ஆறு கால் வண்டான**" ஸ்ரீ முகுந்தகிரி சுவாமியும், ஸ்ரீ புரிசை சுவாமி ஆசார்யன் திருவடி அடைந்தபின், தன்னுடைய ஸத்தை இழந்தது போல் துயருற்றாலும், ஆசார்யன் தனியனையே அனுதினமும் ஸேவித்து, அவரிடம் பயின்றதையே மீண்டும் சிந்தனம் செய்தபடி இருந்துகொண்டு, அவரின் கட்டளைகளையே சிரமேற்கொண்டு செயல்படுத்தி வருகிறார் என்பது அனைவரும் அறிந்ததே.

வண்டானது பூக்களில் உள்ள தேனை பருகுமே தவிர்த்து, பூக்களை மாலையாகத் தொடுத்து ஸமர்ப்பணம் செய்யாது! ஆனால், ஸ்ரீ முகுந்தகிரி சுவாமியோ, தன் ஆசார்யரான ஸ்ரீ புரிசை சுவாமியின் திருவடித்தாமரைகளில் காலக்ஷேபம் செய்தது மட்டுமல்லாமல், "பத்யமாலிகா" எனும் புஷ்ப மாலையையும் ஸமர்ப்பித்துள்ளார் என்பதே இங்கு சுவாரஸ்யம்.

**श्रीमते वात्स्यश्रीकृष्णमार्य महादेशिकाय नमः**

சித்ரபாநு வருடம் கார்த்திகை மாதம் ஸ்ரீ புரிசை சுவாமியின் சுபஸ்வீகாரத்தன்று (3-12-2002), சுவாமியின் அந்தேவாசியான ஸ்ரீ அநந்தபத்மநாபாசார்யரால் பத்யமாலிகா இயற்றி ஸமர்ப்பிக்கப்பட்டது.

புரிசை நடாதூர் ஸ்ரீபாஷ்ய ஸிம்ஹாஸனம் வாத்ஸ்ய ஸ்ரீ க்ருஷ்ணமார்ய மஹாதேசிகனின் 100வது திருநக்ஷத்ர மஹோத்ஸவத்தின் தொடக்கத்தில், பத்யமாலிகாவின் அர்த்தம் அடியேனால் ஸமர்ப்பிக்கப்படுகிறது.

ப்ராசார்யன் மற்றும் ஆசார்யன் ஆசி வேண்டி,


அடியேன்

ஸ்ரீ முகுந்தகிரி APN சுவாமியின் காலக்ஷேப சிஷ்யை & சரன் ஸேவக்

ஸ்ரீரஞ்ஜனி ஜகந்நாதன்

ப்லவ - ஆவணி - சித்திரை

10-செப்டம்பர்-2021





# ஸ்ரீ உ.வே. புரிசை சுவாமியின் சதாபிஷேக வைபவம்



||श्रीः||

# மஹநீயருக்கு நடந்த மஹோத்ஸவம்

ஒருவருடைய ஸௌக்ருத விஶேஷத்தினால் மிகச் சிறந்த ஸம்பவம் வாழ்க்கையில் ஒரு முறைதான் ஏற்படும் என்பர் பெரியோர். ஆனால் சில ஸமயம் அனைவரின் ஸௌக்ருத விஶேஷமும் ஒட்டுமொத்தமாய்ப் பலிப்பது என்பது ஆஶ்சர்யகரமானதொன்றாகும். சென்னை வாஸிகளுக்கு இவ்வநுபவம் இருமுறை கிட்டியது. சென்ற கார்த்திகை மாதம் ஸ்ரீமத் அழகியசிங்கரின் 75 வது திருநக்ஷத்ர மஹோத்ஸவத்தைச் சேலையூர் ஸ்ரீமத் அஹோபிலமடத்தில் அநுபவித்த பாரிப்பு அடங்கு முன்னரே மற்றொரு மஹோந்நதமான உத்ஸவத்தை அநுபவித்தனர். ஸ்ரீமத் அழகிய சிங்கரின் பூர்வாஶ்ரமத் திருநாமம் கொண்டவரும், பிதாமஹரான பீஷ்மரைப் போன்று எழுந்தருளியுள்ளவரும், *ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா* முன்னாள் ஸம்பாதகருமான புரிசை ஸ்வாமியின் ஶதாபிஷேகோத்ஸவத்தைக் கண்ட ஆயிரமாயிரம் ஆஸ்திகர்கள் **கிம் ஆஶ்சர்யம் இத:பரம்** (இதைக் காட்டிலும் ஆஶ்சர்யம் வேறென்ன உள்ளது ?) என்று அநுஸந்தித்து வருகின்றனர்.

**नित्यान्नदाता तरुणाग्निहोत्री वेदान्तवित् चन्द्रसहस्रदर्शी ।**

**मासोपवासी च पतिव्रता च षट् वन्दनीयाः मम जीवलोके ॥**

[நிதமும் அந்நதாநம் செய்பவர், அக்நிஹோத்ரம் செய்பவர், வேதாந்தமறிந்தவர், ஆயிரம் சந்த்ரனைப் பார்த்தவர், மாஸத்தில் உபவாஸம் இருப்பவர், பதிவ்ரதை என இவர்கள் அறுவரும் என்னால் ஸேவிக்கத்தக்கவர்கள் (பரமாத்மா)] என்று இந்த ஶ்லோகம் சிறப்பித்துக் கூறுகிறது. இனி இவ்வாறும் நம் ஸ்வாமி ஒருவரிடமே ஒருங்கே குடி கொண்டுள்ளதைக் காணலாம்.

**நித்யாந்நதாதா** - நிதமும் அந்நமிடுபவர். இங்கு அந்ந ஶப்தத்தினால் **அந்நவாநந்நாதோ[3] ப[4]வதி** என்று பரமாத்மா குறிக்கப்படுகிறான். அந்த ஶப்த வாச்யனான எம்பெருமானை நிதமும் ஶிஷ்யர்களுக்கு அளிப்பவர். காலக்ஷேபம் ஸாதிப்பவர் என்பது பொருளாம். ஸ்ரீபாஷ்யம் முதலான பஹு க்ரந்தங்களை உலகிற்கு அளிப்பவர். குருகுலவாஸம் செய்யும் ஶிஷ்யர்கள்

பலரும் ஸ்வாமி திருமாளிகையிலேயே சாப்பிடுவதும் உண்டு. அந்த ரீதியிலும் **நித்யாந்நதாதா** என்பதாகிறார்.

**அக்நிஹோத்ரீ** :- அக்நி ஶப்தம் அக்நிக்கு அந்தர்யாமியான பரமாத்மாவைத்தான் சொல்லும் என்பது வேதாந்திகளின் அபிப்ராயம் - **அக்ரம் நயதி** - உயர்ந்த லோகத்திற்கு அழைத்துச் செல்கிறான் எனும் வ்யுத்பத்தியைக் கொண்டு **அக்நி** ஶப்தம் பரமாத்மாவைச் சொல்கிறது என்பதை **ஸாக்ஷாதப்யவிரோதம் ஜைமிநி:** எனும் ஸூத்ரபாஷ்யத்தில் காண்கிறோம். அதன்படி **அக்நிஹோத்ரீ** என்றால் பகவானை ஆராதிப்பவர் என்பது பொருள்.

**வேதா$^3$ந்தவித்** :- வேதாந்தத்தைக் கசடறக்கற்று **ஸுக$^2$போ$^3$தி$^4$நீ** வ்யாக்யாநம் மூலமாக ஸூக்ஷ்மமான பல அம்ஶங்களை உலகிற்கு அளிப்பவர்.

**சந்த்ரஸஹஸ்ரத$^3$ர்ஶீ** :- ஶதாபிஷேகம் கொண்டாடுவதால் இதுவும் ஸித்தம்.

**மாஸோபவாஸீ** :- வைதிகாசாரத்தில் நிலைபெற்றுள்ள இவருக்கு மாஸோபவாஸம் ஸ்வபாவஸித்தம். தவிரவும் **तपसा अनाशकेन ब्राह्मणाः विविदिषन्ति** எனுமிடத்தில் அநஶநம் என்பதற்குச் சாப்பிடாமல் இருத்தல் என்ற அர்த்தம் கொள்ளாமல் **காம அநஶநாத்மகம்** - விரும்பியபோதெல்லாம் சாப்பிடாமல் இருத்தல். கண்டபடிச் சாப்பிடுவதை இங்கு நிஷேதிக்கிறது. எனவே தேஹ தாரணார்த்தம் ப்ரஹ்மவித்துக்களின் ஆஹார நியமம் குறிப்பிடப்படுகிறது.

**பதிவ்ரதா** :- ஸ்த்ரீப்ராயம் **இதரம் ஜகத்** எனும்படி எம்பெருமானைத் தவிர்த்து **உன்னித்து மற்றொரு தெய்வம் தொழாள் அவனையல்லால்** என்ற பதிவ்ரதா தர்மத்தை கைக்கொண்டவர். பரதேவதா பாரமார்த்ய வேதியான இவர் ஷாட்குண்ய பரிபூர்ணனான ஸ்ரீமாலோலனை பதியாக வரித்து அவன் திருவடியில் ஆத்மாவை ஸமர்ப்பித்தவர்.

இம்மஹநீயரின் ஶதாபிஷேகோத்ஸவம் 10-9-2002 சென்னை சேலையூர் ஸ்ரீமடத்தில் விஶேஷமாய் நடைபெற்றது. முன்னதாக உபயவேதபாராயணங்கள் ஸ்வாமி திருமாளிகையில் 4 நாட்களாக நடைபெற ப்ரதிதிநம் மாலை ப்ரஹ்மஸ்ரீ ஸுந்தர்குமார், ஸ்ரீ.உ.வே. வேளுக்குடி க்ருஷ்ணன்,

ஸ்ரீ.உ.வே.தேரழுந்தூர் ராமபத்ராசார்யர் ஸ்வாமிகள் இவர்களின் உபந்யாஸங்கள் விசேஷமாய் நடைபெற்றன. 9-9-2002 அன்று முக்கூர் ஸ்ரீமத் அழகியசிங்கர் திருநக்ஷத்ரம் சேலையூரிலேயே காலை ஸேவை, சாற்றுமுறை, ஸ்ரீபாததீர்த்தம், ததீயாராதநம் மாலை வித்வத்ஸதஸ்ஸும் நடந்தன. காலை திருவாராதநகாலத்தில் ஆறுபாதி ஸ்ரீ.உ.வே ஸ்ரீராம தேசிகாசார்யர் ஸ்வாமி ஆசார்ய வைபவம் பற்றி உபந்யஸித்தார்.

சுமார் ஐம்பது வித்வான்கள் கலந்துகொண்ட வித்வத்ஸதஸில் விஷயம் சொல்லாதவர்கள் எவருமே இல்லாமலும், மிகவும் அபூர்வமான முறையில் கேள்விப் பரிமாற்றங்களும் வாக்யார்த்த குதூஹலிகளான மிகப்பெரும் வித்வத்கோஷ்டியினால் நடத்தப்பெற்றது. ஒரே வரிசையில் உயர்ந்த ஆஸநங்களில் வித்வான்கள் கோஷ்டியை அலங்கரித்ததைக்கண்டு இது ஸ்ரீபாஷ்ய ஸிம்ஹவநம் என்று ஒரு ரஸிகர் குறிப்பிட்டார். பெருக்காரணை ஸ்ரீ.உ.வே. சக்ரவர்த்யாசார்யர் ஸ்வாமி, கோஷ்டீபுரம் ராமாநுஜாசார்யர் ஸ்வாமி, புதுக்கோட்டை சேஷாத்ர்யாசார்யர் ஸ்வாமி, நாவல்பாக்கம் வரதாசார்யர் ஸ்வாமி, வலையப்பேட்டை ராமாநுஜாசார்யர் ஸ்வாமி, பையம்பாடி ஸ்ரீவத்ஸாங்காசார்யர் ஸ்வாமி என ப்ரபல வித்வான்கள் அனைவருமே கலந்துகொண்டனர். ஸ்ரீமத் அழகியசிங்கரும் தான் இதனை முன்னின்று நடத்திவைக்கும் பொருட்டு ஸ்ரீகார்யம் ஸ்வாமியை ப்ரதிநிதியாக அனுப்பி, பெருமாள் ப்ரஸாதங்களையும், பலமந்த்ராக்ஷதையையும் அநுக்ரஹித்தாயிற்று.

மறுநாள் காலையில் ஆயிரக்கணக்கான ஸ்ரீ வைஷ்ணவத்திரள் குழுமியிருக்க மிகச்சிறந்த வைபவம் நடைபெற்றது. விழாவின் முக்ய அங்கமாக ஸ்வாமியின் வ்யாக்யாந ஸ்ரீ கோசங்கள் வெளியிடப்பட்டன. ஸ்ரீ R.K.ஸ்வாமி, ஸ்ரீ S.V.S. ராகவன், ஸ்ரீ B.T. சேஷாத்ரி, ஸ்ரீ R. ராஜன், ஸ்ரீ K.S. வரதராஜன், ஸ்ரீ T.S. வரதராஜன் என ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா குடும்பத்தினர் அனைவரும் இவ்விழாவில் கூடிக்களித்தனர். பல திவ்யதேச மர்யாதைகள் நடைபெற்ற ஸமயம் ஒரகடம் ஸ்ரீ.உ.வே லக்ஷ்மீ ந்ருஸிம்ஹாசார்யர் ஸ்வாமி அவற்றை அழகாகத் தொகுத்தளித்தார்.

விழா ஏற்பாடுகள் அனைத்தையும் ஸ்ரீமான் சாரி, ஸ்ரீ சேஷாத்ரி, மற்றும் ஸ்வாமி சிஷ்யர்கள் கூடியிருந்து சிறப்பாகச் செய்திருந்தனர்.

அந்தேவாஸீ